1979 ஏப்ரல் 17]

அடுத்து இந்த சலவைத் தொழிலாளி என்ற கேள்வியில் பேசும்போது குதிரை வண்ணான் என்றும் கழுதை வண்ணான் என்றும் அந்த இனத்தவரைக் கேவலப்படுத்தக்கூடிய வகையில் அமைச்சரவர்களும் மற்ற உறுப்பினர்களும் சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, புதிரை வண்ணான் என்பது பட்டியலில் இருக்கிற பெயர். ஆகவே நானோ மற்ற உறுப்பினர்களோ வேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே இதிலே தவறேதும் இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் அனுதாபம் இருக்கிறது. ஆகவே 1970-ம் ஆண்டு பரிந்துரை செய்தபோது மத்திய அரசு கேட்கவில்லை. மீண்டும் பரிந்துரைக்க அரசு தயாராக இருக்கிறது.

*வினா எண். 692—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சவரத் தொழிலாளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கக் கோரி, அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) சவரத் தொழிலாளர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாகாத காரணத்தால் இவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க இயலாது என்று மத்திய அரசாங்கம் கூறிவிட்டது.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, இந்தச் சவரத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்ததாகவும் அதற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆகவே மீண்டும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசு கேட்டுக்கொண்டு அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அனுமதி பெறுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து இதுவரை எந்த எந்த இனத்தவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அண்மையில் பாராளுமன்றக் குழு தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோது சவரத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கை மனுவைத் தந்திருக்கிறார்கள். மத்திய அரசும் பரிசீலனைசெய்து மாநில அரசின் கருத்தைக் கேட்கிற நேரத்தில் இந்த அரசு அனுதாபத்தோடு பரிந்துரை செய்யும்.

அடுத்து எந்தெந்த வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மனுச் செய்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். பல வகுப்பினர் அடங்கிய பட்டியல் அதிலே இருக்கிறது. அதை இந்த அவையிலே சொன்னால் நேரம் அதிகமாகும். ஆகவே நேரத்தைக் கருதி தனியாக வேண்டுமென்றால் அச்சடித்து கொடுத்து விடுகிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. பி. ஈஸ்வரமூத்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தியதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மீண்டும் மத்திய அரசை அந்த லிஸ்ட்டில் சேர்க்க வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தி அதற்காக இந்தச் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அனுதாபம் இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். மீண்டும் அரசு பரிந்துரை செய்யும். இதற்காக சட்டசபையில் ஒரு தீர்மானம் போட வேண்டிய அவசியம் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

லாரி போக்குவரத்தில் பணிபுரிவோர்களுக்கு நஷ்ட ஈடு

*வினா எண். 693— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) லாரி போக்குவரத்தில் ஈடுபடும் டிரைவர், கிளீனர்கள் விபத்தில் இறந்தால் நஷ்டஈடு கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) நஷ்டஈடு கேட்டு தொழிலாளர்கள் முதல்வரிடம் விண்ணப்பித்துள்ளார்களா?